**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC. No.124/2023 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.8 |
| பெயர் | பெ.சரவணன் | கிராமம் | |
| தந்தை பெயர் | பெருமாள் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.P.Manikandan, Junior Assistant of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 23.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.

Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அன்னவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.05.2023 அன்று நான் புதுக்கோட்டை நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது புதுக்கோட்டை அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பட்ட தகவலின் அடிப்படையில் காலை 08.00 மணிக்கு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கணேசன் என்பவரை பார்க்க அவர் மயக்க நிலையில் இருந்ததால் அவரது மனைவி ஜானகி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காலை 09.30 மணிக்கு நகர காவல் நிலையம் வந்து நிலைய பொறுப்பை பெற்று மேற்படி வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப புதுக்கோட்டை நகர காவல் நிலைய குற்ற எண் 216/2023 இதச பிரிவுகள் 279, 337 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5. மேற்படி வழக்கை நான் தொடர்ந்து புலன்

விசாரணை மேற்கொண்டு காலை 10.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரீகன், சரவணபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 . அதன் பிறகு சாட்சிகள் ஜானகி, சந்தோஷ், சதீஷ்குமார், தினகரன், நாகராஜன் என்ற சதீஷ், ரீகன், சரவணபாண்டியன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு மேற்படி வழக்கில் காயம்பட்ட கணேசன் என்பவர் சிகிச்சை பலனின்றி 24.05.2023ம் தேதி அதிகாலை 02.10 மணிக்கு இறந்து விட்டதாக 03.00 மணிக்கு வரப்பெற்ற மருத்துவமனை தகவலை பெற்று வழக்கின் சட்டபிரிவை 279, 304(A) இதச வாக மாற்றம் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். பொறுப்பு காவல் ஆய்வாளர் வேறு அலுவலாக சென்றுள்ளதால் ஆய்வாளர் அவர்களின் வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் மேற்படி வழக்கை எனது தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.00 முதல் 11.30 மணி வரை கணேசன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8. அதன் பிறகு மேற்படி பிரேதத்தை மருத்துவரின் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். சாட்சிகள் ஜானகி, சந்தோஷ், பாலமுருகன், காளீஸ்வரன், பன்னீர்செல்வம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர் விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை

பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 சாட்சிகளை நான் தான் விசாரணை செய்தேன். மேற்படி 10 நபர்களும் சம்பவ சாட்சிகள் என்று சொன்னால் சரிதான். விபத்து சம்பவம் நடைபெற்ற மறுநாள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை எந்த தேதியில் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது

என்று கேட்டால் அது குறித்த ஆவணம் எதுவும் என் கைவசம் இல்லை. நான் விசாரித்த சாட்சிகள் அனைவரையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தேதியில் இருந்து 2 நாட்களுக்குள் விசாரித்து முடித்துவிட்டேன். சம்பவம் நடந்த இடத்தில் வீடுகள் இருந்தது என்று சொன்னால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகள் யாரும் சம்பவ இடத்தில் வசிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த இடம் பிரதான சாலை என்று சொன்னாலும் அது கிழமேல் சாலை தான் என்று சொன்னாலும் சரிதான். சம்பவ சமயத்தில் இறந்து போன கணேசன் கிழக்கிலிருந்து மேற்காக வந்து கொண்டிருந்தார் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த இடமாக நான் குறிப்பிட்டிருப்பது ரோட்டுக்கு வலதுபுறம் என்று சொன்னால் சரிதான். இறந்து போன கணேசன் சம்பவ சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தாரா என்று எனது விசாரணையில் தெரியவரவில்லை. சம்பவ இடத்தில் மொத்தம் 3 வீடுகள் இருந்தது. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்று சொன்னாலும் நான் தயார் செய்த ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்தேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் சம்பவ இட சாட்சிகளை முறையாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சாட்சிகள் அனைவரும் இறந்து போனவருக்கு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என்று சொன்னால் சரியல்ல.

Sd/–பெ.சரவணன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**